இந்தியாவில் இப்படியும் சிந்தித்து சமூக நீதிப் பாதையில் ஆட்சி புரிய முடியுமா என மற்ற மாநில முதல்வர்களுக்கெல்லாம் முன்னுதாரணமாகத் திகழும் முன்னோடியாம், விநாடியின் நேரத்தையும் பகுத்து, தமிழருக்கான புதியத் திட்டம் வகுத்து, ஆழம் அறிய முடியாத அமைதியான கடல்போல் இருந்து, அனுதினமும் தமிழுக்கு, தமிழருக்கு விலைமதிப்பில்லாத ஆட்சியை வழங்கி, வரலாறாய் வாழ்ந்து வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வணங்கி, இம்மன்றத்தில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எங்களுடைய இதயங்களில் உணர்வோடு நிறைந்திருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியினை அந்தியூர் சட்டமன்றத் தொகுதி மக்கள் சார்பாகத் தெரிவித்துக்கொண்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

8. சட்டமன்றத்தால் மீண்டும் நிறைவேற்றப்பட்ட நீட் விலக்கு சட்டமுன்வடிவினை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக ஆளுநர் அனுப்பி வைத்துள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவக் கனவைச் சிதைத்துவரும் நீட் தேர்விலிருந்து நமது மாணவர்களுக்கு விலக்கு பெற வேண்டும் என்பதற்காக இந்த அரசு எடுத்து வரும் தொடர் நடவடிக்கைகள் பற்றி நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

இதன் முதல் படியாக நாம் அனைவரும் இணைந்து இந்த மாமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றிய நீட் விலக்கு தொடர்பான சட்டமுன்வடிவை மாண்புமிகு ஆளுநர் அவர்கள் மறுபரிசீலனை செய்யுமாறு கோரியதும், அதுகுறித்து அனைத்துச் சட்டமன்றக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி விரிவாக விவாதித்து, சில தினங்களுக்குள்ளாகவே மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்கு ஏதுவாக, மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு மீண்டும் அனுப்பி வைத்தோம்.

இதுதொடர்பாக மாண்புமிகு ஆளுநர் அவர்களை நான் நேரில் சந்தித்து, மேலும் தாமதமின்றி இந்தச் சட்டமுன்வடிவை ஒன்றிய உள் துறை அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றும்,

மாண்புமிகு பிரதமர் அவர்களையும், மாண்புமிகு உள் துறை அமைச்சர் அவர்களையும் சந்தித்து இந்தச் சட்டமுன்வடிவிற்கு விரைவில் ஒப்புதல் அளிக்கப் பெற வேண்டுமென்றும் வலியுறுத்தினேன். அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதுகுறித்து மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களது அலுவலகத்தில் மனு அளித்திருக்கிறார்கள்.

இந்தத் தொடர் முயற்சிகளின் பயனாக, ஒரு வரலாற்று நிகழ்வாக, நாம் சட்டமன்றத்தில் மீண்டும் நிறைவேற்றி அனுப்பி வைத்த நீட் விலக்கு சட்டமுன்வடிவினை ஒன்றிய உள் துறை அமைச்சகத்திற்கு மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்கு ஏதுவாக மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அனுப்பி வைத்துள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற தகவலை மாண்புமிகு ஆளுநர் அவர்களின் செயலர் அவர்கள் சில மணித்துளிகளுக்கு முன்பாக என்னிடம் தொலைபேசி வாயிலாகத் தெரிவித்துள்ளார் என்பதை இந்த அவையில் மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நீட் விலக்கு தொடர்பான நமது போராட்டத்தின் அடுத்த கட்டமாக ஒன்றிய அரசை வலியுறுத்தி, இந்தச் சட்டமுன்வடிவிற்கு மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்கான அனைத்து முயற்சிகளையும் நாம் அனைவரும் இணைந்து மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

7. மானியக் கோரிக்கைகள், 2022—2023, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 47– இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

(ஆ) கோரிக்கை எண் 31– தகவல் தொழில்நுட்பவியல் துறை

—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.*